# செய்திகளும் குறிப்புகளும்

**09.05.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1055**

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)

**16. வாழ்க்கையின் பகுத்தறிவு கடந்த கடைசி முடிவு**

இவை அதனுடைய சாதாரண முயற்சிக்குரியவை, பிறஅனைத்தும் அதனுடைய ஓய்வுநேரத்திற்குரியவை; இந்தக் கருப்பொருளால்தான் அது ஆக்கப்பட்டுள்ளது. பிற அனைத்தும் அதனுடைய அணிமணியின் பகுதிகள் மற்றும் கட்டாயத் தேவையல்லாத மேம்பாடு தருபவை. இந்தப் பிறவற்றிற்கெல்லாம் சமுதாயம் ஓர் இடம் அளிக்கிறது, ஆனால் அதனுடைய இதயம் அங்கே இல்லை. அது நன்னெறியை ஒரு பிணைப்பிற்காக ஒரு செல்வாக்காக ஏற்கிறது, ஆனால் நன்னெறியின் நன்மைக்காக அது வாழ்வதில்லை; அதனுடைய உண்மையான கடவுளர், பிராணத்தேவை, பயன்பாடு, மற்றும் உடலின் விருப்பங்களாம். அது ஓரளவு நன்னெறி விதிமுறைகள் மூலம் தன்னுடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிறது என்றால் அதற்குக் காரணம் பிராணத்தேவை, விருப்பம், பயன்பாடு அவற்றிற்கே உரிய திருப்தியைப் பல தன்முனைப்பான தனிமனிதர்களின் மூலம் நாடுகையில், தங்களுக்குள்ளாகவே மோதிக்கொண்டு தங்கள் சொந்த நோக்கங்களையே அழித்துவிடும் என்பதால் தான்; அது தன்னுடைய வாழ்க்கையை முழுதும் நன்னெறியார்ந்ததாக உருவாக்க வேண்டியதாக உணர்வதில்லை. அது அழகுடன் இதனினும் குறைவாகவே அக்கறை கொள்கிறது; அது அழகிய பொருள்களை ஓர் அணிகலனாக மற்றும் வேடிக்கையாக, கண் மற்றும் செவி மற்றும் மனத்தின் ஒரு திருப்திக்காக, மற்றும் பொழுதுபோக்காக அனுமதிக்கிறது; அதனுடைய வாழ்க்கையை ஓர் அழகுப் பொருளாக ஆக்குவதற்கு எதாலும் கட்டாயமாக உந்தப்படுவதில்லை. புனித நாட்களில் கிறித்துவக் கோயில்களிலும் பிறகோயில்களிலும், வாழ்க்கையின் அந்திமகாலத்தில் வயதும் இறப்பின் அணுகலும் கட்டாயமாக இந்த வாழ்க்கையிலிருந்து வேறொரு உலக வாழ்க்கைக்கு கவனத்தை ஈர்க்கும் பொழுதும், ஒரு வாரத்திலோ அல்லது ஒரு நாளிலோ ஒரு குறித்த நேரத்தில், அது தனது உலக நடவடிக்கைகளை ஒரு கணம் நிறுத்தி கடவுளை நினைப்பது நல்லது என்று நினைக்கும்போதும், அது மதத்திற்கு ஒரு நிலைத்த இடத்தையும் பங்கையும் அனுமதிக்கிறது; ஆனால் வாழ்க்கை முழுவதையும் ஒரு மதமாக, கடவுளின் ஒரு நினைவாக மற்றும் அவனை நாடுவதாகச் செய்வது, இன்னமும் ஆன்மீகத்தையே தங்கள் நோக்கமாகவும் கொள்கையாகவும் உடைய இந்தியச் சமுதாயம் போன்றவைகளிலும் கூட, உண்மையாகச் செய்யப்படவில்லை. அது தத்துவத்தை இதைவிட அதிகத் தொலைவான ஒரு முறையிலேயே அனுமதிக்கிறது; மேலும் தற்காலத்தில் அது ஆவலுடன் விஞ்ஞானத்தை நாடுகிறதென்றால் அதற்குக் காரணம், விஞ்ஞானம் அதனுடைய பிராண விருப்பங்களுக்கு, தேவைகளுக்கு மற்றும் தனிப்பற்றுகளின் திருப்திக்கு அமோகமாக உதவுகிறது; ஆனால் அது ஒரு முழுமையான நன்னெறி வாழ்க்கையை ஒருபோதும் நாடாததைப்போலவே, ஒரு முழுமையான விஞ்ஞான வாழ்க்கையை நாடித் திரும்புவதும் இல்லை. அது இந்த இலக்குகளில் ஏதேனும் ஒன்றின் ஓர் அதிக முழுமையான முயற்சியைத் தனிமனிதனுக்கு, குறிப்பிட்ட சிலருக்கு, மற்றும் சிறப்புவகை தனிமனிதர்களான துறவிக்கு, நன்னெறி மனிதனுக்கு, கலைஞனுக்கு, சிந்தனையாளனுக்கு, மதவாதிக்கு விட்டுவிடுகிறது, அது அவர்களுக்கு ஓர் இடம் அளிக்கிறது, அவர்களுக்கு மரியாதை தருகிறது. அவர்கள் குறிக்கும் பொருள்களுக்கு ஏதேனும் இடம் ஒதுக்குகிறது; ஆனால் தன்னைப்பொறுத்தமட்டில் அது தனக்குரிய கொள்கையான பிராணத்திருப்தி, பிராணத்தேவை மற்றும் பயன்பாடு, பிராணப்பயனுறுதி இவற்றை முக்கியமாகப் பின்பற்றுவதிலேயே திருப்தியடைகிறது.

இதற்குக் காரணம் நாம் இங்கே நம்முடைய இருப்பின் வேறொரு சக்தியை அடைகிறோம்; அது நன்னெறியான, அழகுணர்வான, பகுத்தறிவான மற்றும் மதவியல்பான சக்தியினும் மாறுபட்டது அது படித்தரத்தில் குறைந்த ஒன்று என நாம் கண்டுணர்ந்தாலும், இன்னமும் அதற்குரிய உரிமையை அது வற்புறுத்துகிறது. மேலும் அதற்கு இருப்பதற்குரிய உரிமை மட்டுமின்றி அது தன்னைத் திருப்தி செய்துகொள்வதற்கும், தான் நிறைவுறுதற்குமான உரிமைக்கும் உரியது. அது உண்மையிலேயே முதல் நிலை சக்தி, அது இந்நிலவுலகில் நம் வாழ்க்கையின் அடிப்படை, அதைத்தான் மற்றவை தம்முடைய தொடக்க நிலையாகவும் அடித்தளமாகவும் கொள்கின்றன. அதுதான் நம்மிடம் உள்ள உயிர்சக்தி (life-force), பிராணத்துவமான மற்றும் இயங்காற்றலுள்ள இயற்கை. அதனுடைய முழு தத்துவமும் நோக்கமும் இருத்தல், தன்னுடைய வாழ்வை வலியுறுத்தல், பெருகல், விரிவடைதல், உடைமையாக்கல் மற்றும் அனுபவித்தலாம். அதனுடைய சொந்தமான இயல்பு, இருப்பின் வளர்ச்சி, இன்பம் மற்றும் ஆற்றல் உயிர்வாழ்க்கையே இங்கு, ஜடப்பொருளில் உணர்வுள்ள சக்தியின் அம்சங்களாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளக் கடும்முயற்சி செய்யும் புருஷனாக இருக்கிறது; மனிதவாழ்க்கை என்பது மனிதஜீவன் தன்னைத்தானே, பருப்பொருள் உலகின் மீது, சாத்தியமான மிகப்பெரிய சக்தியுடன் மற்றும் தீவிரத்துடன் மற்றும் விரிவுடன் பதியவைப்பதற்கான கடும்முயற்சியாம்; அவனுடைய முதல்நிலையிலான தொடர்ந்து வற்புறுத்தும் குறிக்கோள் வாழ்தலும், உலகில் தனக்கென ஓர் இடம் பெறுதலும், தனக்கும் தன் இனத்தாருக்கும்; இரண்டாவதாக, அதைச் செய்தபின், விடாது விரிவடையும் வாய்ப்புடன் உடைமையாக்கல், உற்பத்தி மற்றும் அனுபவித்தலாம்; இறுதியாக உலகவாழ்க்கை அனைத்திலும் தான் பரவியிருத்தலும், அதன்மீது ஆதிக்கம் செலுத்துதலுமாகும்; அதுதான் அவனுடைய முதல் நடைமுறைச் செயலாக இருக்கிறது மற்றும் இருந்தேயாகவேண்டும். இதைத்தான் டார்வினின் கொள்கையை ஆதரிப்பவர்கள் (Darwinism) "வாழ்க்கைப் போராட்டம்" என்ற கருத்தால் வெளியிட முயன்றனர். ஆனால் இந்தப் போராட்டம் வெறும் நீடித்திருக்கவும் வாழ்வதற்கு மட்டுமானதன்று, ஆனால் பெருகவும் அனுபவிக்கவும் மற்றும் உடைமையாக்கிக்கொள்வதற்குமான ஒன்றாகும். அதனுடைய நடைமுறை தன்முனைப்பின் தத்துவமும் இயலறிவும் கொண்டதாகவும் அவற்றை உபயோகிப்பதாகவும் இருப்பதோடல்லாமல், அதைப் போலவே கூட்டிணைப்பின் தத்துவமும், இயலறிவும் கொண்டதாக உள்ளது. மனித வாழ்க்கை ஒப்ப சக்திவாய்ந்த இரு உள்ளுந்துதல்களால் இயக்கப்படுகிறது. அஃதே தனிமனிதத் தன்முனைப்பு மற்றும் கூட்டுத் தன்முனைப்பாம்; அது மோதலுடன் செயலாற்றுகிறது. ஆனால் பரஸ்பர உதவியாலும் மற்றும் ஒருங்கிணைந்த முயற்சியாலும் கூடச் செயலாற்றுகிறது; அது இரு மாறுபட்ட ஒருங்கு கூடுகிற வடிவங்களால் செயல்படுகிறது, இரு செயல்நோக்க சக்திகள் ஒன்றுக்கொன்று முரணானவை போல் தோன்றும், ஆனால் உண்மையில் எப்பொழுதும் உடனொத்துவாழும் போட்டிபோடும் முயற்சி மற்றும் கூட்டுறவு முயற்சியாகும். வாழ்க்கையின் இந்த இயங்காற்றல் பண்பிலிருந்துதான் மனித சமுதாயத்தின் முழு அமைப்பும் தோன்றியுள்ளது; மேலும் இந்த இயங்காற்றலின் தொடர்ந்த மற்றும் தீவிரமான செயலைத்தான், அனைத்து மனித சமுதாயங்களின் தொடர்ச்சியும் சக்தியும் மற்றும் வளர்ச்சியும் சார்ந்திருக்கின்றன. அவற்றில் உள்ள இந்த உயிர்ச்சக்தி தவறுமானால், மற்றும் இந்த செயல்நோக்க சக்திகள் வலிமை குன்றப்பெறுமானால், அதன்பிறகு அனைத்தும் வாட்டமுறத்தொடங்கும், தேக்கமடையும் இறுதியில் துண்டுதுண்டாகச் சிதைவுறுதலை நோக்கி நகரும்.

சமுதாயத்தைப் பற்றிய நவீன ஐரோப்பியக் கருத்து, சமுதாயத்தை உருவாக்கலிலும் மற்றும் அதன் பராமரிப்பிலும் இந்த உயிர்ச்சக்திச் செயலூக்கத்தின் முதன்மையான மற்றும் எல்லாவற்றினும் முற்பட்டதான பங்கினை ஆற்றுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்: ஏனென்றால் எப்பொழுது டியூடானிக் இன மனம் மற்றும் போக்கு மேற்கத்திய ஐரோப்பாவை நிரந்தரமாகக் கொண்டதோ அப்பொழுதிலிருந்து, ஐரோப்பியன் அடிப்படையில் நடைமுறைக்கு உரிய இயங்காற்றுலுடன் செயல் சுறுசுறுப்புடைய மனிதனாக இருந்திருக்கிறான்.

*(தொடரும் .....)*

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: மே 10 வெள்ளிக்கிழமை - "எ விமன் ஆஃப் பாரீஸ்" ("A WOMAN OF PARIS").** யுஎஸ், 1923.

இந்த வாரம் சார்லஸ் சாப்ளின் எழுதி, இயக்கி, இசையமைத்த 1923ஆம் ஆண்டு ஊமைத் திரைப்படத்தை வழங்குகிறோம்; மேலும் அவர் நடிகராகத் தோன்றாத முதல் படம்!
*நடிகர்கள்:* எட்னா பர்வியன்ஸ், கார்ல் மில்லர், லிடியா நாட், அடோல்ஃப் மென்ஜோ.
இசையுடன் கூடிய அசல் ஊமைப்படம் பதிப்பு - ஆங்கில துணைவாசகங்கள், கால அளவு: 1மணிநேரம் 18 நிமிடம்.

சாப்ளினின் கூர்மையான பார்வை மற்றும் மனிதநேயம் கொண்ட இந்த காதல் நாடகத்தை நீங்கள் இரசிப்பீர்கள் என்று நம்புகிறோம்... இந்த திரைப்படக் காட்சிக்குப் பிறகு, கோடை விடுமுறை எடுத்துக்கொள்கிறோம். மீண்டும் வெள்ளிக்கிழமை திரைப்படக்காட்சி மற்றும் சினி-மாஸ்டர் வகுப்புகளுடன் ஜூலை மாதத் தொடக்கத்தில் சந்திப்போம்! நீங்கள் எங்கிருந்தாலும் தங்களுக்கு கோடை காலத்திற்கான எங்களின் அன்பு வாழ்த்துக்கள்.
*ஆரோபிலிம் குழு*

---

Savitri BHAVAN

**கனவு தெய்வீகம் தொடர்** (Dream Divine Series)



குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('தி ட்ரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**மே 15 புதன்கிழமை, மாலை 4.30-5.30**

**"Building Matrimandir - A Labour of Love"**

**ஆரோவில் 1971 - 2008**

**சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹால்**

அனைவரும் வருக.

---

**தற்காப்புக் கலைகள் - ஆரோவில் அய்கிடோ** (Martial Arts - Auroville Aikido- Summer update)

ஆரோவில் புடோகனில் (தேகசக்தி) ஆரோவில் அய்கிடோ:
ஆரம்ப மற்றும் அனைத்து நிலைகளுக்கான பெரியவர்களின் வழக்கமான கால அட்டவணை: கோடையில் நாங்கள் எங்கள் ஆரம்ப வகுப்புகளைத் தொடர்கிறோம், ஆனால் புதன் மாலை மற்றும் ஞாயிறு காலை வகுப்புகள் இல்லை. எனவே, ஜப்பானிய தற்காப்புக் கலையின் வடிவத்தில் இந்த அழகான மற்றும் முழுமையான பயிற்சியில் சேர வரவேற்கிறோம்: வாரந்தோறும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களில் காலை 6 முதல் 7.30 வரை (N. முருகன் மற்றும்/அல்லது சூர்யாவுடன்). புடோகன் (ஒரு லீட் செயல்பாடு)-க்கு நியாயமான பங்களிப்புத்தொகை தேவை. குழந்தைகள் வகுப்புகள் (8 வயது முதல்) ஜூலையில் மீண்டும் தொடங்கும். மேலும் தகவலுக்கு, எங்களை தொடர்பு கொள்ளவும்: budokan@auroville.org.in மற்றும்/அல்லது 083001 89062 (சூர்யா) - 099528 12843 (முருகன்/ வாட்ஸ்அப்) - 83006 43963 (பிலிப்/வாட்ஸ்அப்).

---

**Integral Mathematics: A Journey of Insight and Inspiration**
**(ஒருங்கிணைந்த கணிதம்: நுண்ணறிவு மற்றும் உத்வேகத்தின் பயணம்)**

**Understanding Purusha**

**மே 25, சனிக்கிழமை, நேரம்: மாலை 4.00 - 5.00 மணி**
**சாவித்ரி பவன் சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

---

## <u>உடற்கல்விக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை- ஆரோவில்லில் 1 ஆண்டு படிப்பு</u>

<u>(Integral Approach to Physical Education- One year course in Auroville)</u>

ஆரோவில் உடற்கல்வி வாரியம் (ஏவிபிஇபி, சையர்) ஆரோவில்லின் (AV) உடற்கல்வி (PE) ஆசிரியர்களுக்கான அடிப்படை ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டத்தை வடிவமைத்துள்ளது. இந்த விரிவான திட்டம் ஆரோவில்லின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் மற்றும் ஸ்ரீஅரவிந்தர், ஸ்ரீஅன்னையின் வழிகாட்டுதலை கருத்தில்கொண்டு உடற்கல்வி பற்றிய அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் ஆண்டுகளில் ஆரோவில்லிற்கான ஒரு புதிய உடற்பயிற்சி ஆசிரியர் குழுவை உருவாக்குவதே இதன் நோக்கமாகும், அதன் உடற்பயிற்சி ஆசிரியர்கள் விளையாட்டு அறிவியல் பற்றிய அறிவும், நடைமுறை பயிற்சியும், மனித உடலின் ஆன்மீக முக்கியத்துவம் பற்றிய ஆழமான புரிதலையும் கொண்டிருக்க வேண்டும். இந்தப் புதிய குழுவானது உடற்கல்வி வகுப்புகளை நடத்துதல், ஆராய்ச்சி நடத்துதல், ஆரோவில் பள்ளிகளுக்கும் சமூகத்திற்கும் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை சிறப்பாக ஏற்படுத்திக்கொடுத்து பயனுள்ளதாக செயல்படும்.

**<u>இப்பாடத் திட்டத்தின் முக்கியக் கூறுகள்-</u>**

| **ஒருங்கிணைந்த கல்வியின் கொள்கைகள்:** | **விளையாட்டு அறிவியல்:** | **செயற்முறை பயிற்சி:** |
|---|---|---|
| முதன்மை வழிநடத்துநர்: பிரவீன் அவர்கள் ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமத்தின் உடற்பயிற்சி குழுவின் உறுப்பினர் ஆவார். | முதன்மை வழிநடத்துநர் - சாவித்திரி - விளையாட்டு அறிவியல்/ஊட்டச்சத்து துறையில் இளநிலை பட்டம் பெற்றுள்ளார், விளையாட்டு மற்றும் ஊட்டச்சத்து துறையில் முதுநிலை பட்டம் பெற்றுள்ளார். | முதன்மை வழிநடத்துநர்: பெட்ரோ, ரூபன்<br>பெட்ரோ - விளையாட்டு அறிவியலில் இளநிலைப்பட்டம், முதுநிலைப் பட்டம், முனைவர் பட்டம் பெற்றவர்.<br>ரூபன் - மனநலக் கல்வியாளர், தற்காப்பு கலை பயிற்றுனர். |
| **முக்கியத் தலைப்புகள்-**<br>• ஒருங்கிணைந்த யோகா அறிமுகம்<br>• ஆரோவில்லின் நோக்கங்களும் இலட்சியங்களும்<br>• கல்விக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் புரிந்து கொள்ளுதல்<br>• ஆன்மீகம் மற்றும் மன நலம்:<br>• யோகா மற்றும் தியானப் பயிற்சிகள்<br>• உடற்கல்வியின் உளவியல் அம்சங்கள்<br>• மன அழுத்த மேலாண்மை நுட்பங்கள் | **முக்கியத் தலைப்புகள்-**<br>• உடற்கூறியல் மற்றும் உடலியல்<br>• பயோமெக்கானிக்ஸ்<br>• உடற்பயிற்சி உடலியல்<br>• விளையாட்டுக்கான ஊட்டச்சத்து<br>• விளையாட்டின்போது ஏற்படும் காயங்கள் மற்றும் சிகிச்சைகள்<br>• விளையாட்டு சமூகவியல் | **முக்கியத் தலைப்புகள்-**<br>• ஆரோவில் பள்ளிகளில் கற்பிக்கும் பயிற்சி<br>• கற்பிக்கும் கலை மற்றும் கற்பிக்கும் முறைகள்<br>• புரிந்துகொள்வதற்கான கற்பித்தல் விளையாட்டுகள் (TGFU)<br>• பாடத் திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல்<br>• மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நுட்பங்கள்<br>• வகுப்பறை மேலாண்மை உத்திகள்<br>• வழிகாட்டுதல் மற்றும் கருத்துகேட்பு அமர்வுகள்<br>• உடற்கல்வி அமைப்புகளில் செயல்திட்டத்தை செயல்படுத்துதல்<br>• முதலுதவி பயிற்சி |

**பங்கேற்பதற்கான அளவுகோல்கள்:**

- இப்பயிற்சி அனைவருக்கும் பொதுவானது, ஆரோவில்லில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்ற விரும்புவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- இந்தத் திட்டத்தில் பங்கேற்பவர்களின் முதன்மையான பணி:
  - ஈடுபாட்டுடன் கற்றுகொள்ளல்
  - ஓராண்டு படிப்பை இடைவிடாமல் தொடர்வதற்கு உறுதியளித்தல்

**சேர்க்கைக்கான தேவைகள்:**

ஆரம்பத்தில், பல்வேறு ஆரோவில் பள்ளிகளில் உடற்பயிற்சி கல்விக்கான பயிற்சி/ கற்பித்தல் வகுப்பு வாரத்தில் ஆறு நாட்கள், திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 2:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை பகுதிநேரம் பங்கேற்பவர்களுக்காக இந்த பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும், பங்கேற்பாளர்களின் பணியின் தரம் தொடர்ந்து மதிப்பிடப்பட்டு, ஆண்டின் இறுதியில் தேர்ச்சி தரத்தை அடைவதற்கான மதிப்பீடு, மதிப்பாய்வு செய்யப்படும்.

**ஆரோவில்வாசிகள் மற்றும் புதிதாய்ச்சேர்ந்தோர்களுக்கான ஆதரவு:**

முடிந்தவரை பெரும்பாலான பங்கேற்பாளர்கள் இந்த பாடத்திட்டத்தில் பங்கேற்க, ஏவிபிஇபி பங்கேற்பாளர்களுக்கு பொருள் ஆதரவை உறுதிப்படுத்தும் வகையில் செயல்படும். நிதி நெருக்கடி அல்லது கவலைகள் காரணமாக எந்தவொரு ஆர்வலரும் இந்த வாய்ப்பை இழக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம்.

இந்த பாடத்திட்டத்தின் முடிவில், ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஆரோவில்லில் உள்ள புதிய உடற்கல்வி ஆசிரியர் குழுவில் ஒருங்கிணைத்து, ஆரோவில்லின் மற்ற ஆசிரியர்களுக்கு இணையான ஆசிரியராக ஆக முடியும்.

**தொடர்புக்கு:**

இப்படிப்பில் சேர உங்களுக்கு ஆர்வமாக இருந்தால் அல்லது இது குறித்து மேலும் விபரம் அறிய விரும்பினால், கீழே உள்ள இணைப்பை கிளிக் செய்யவும் அல்லது கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து படிவத்தை பூர்த்தி செய்யவும்-
https://docs.google.com/forms/d/e/1FAIpQLSeXxZV8tE7AtdWPC9LZ4A7zMBbO7OwR5CZ6C8rPQao7wFT8-Q/viewform?usp=sf_link

*நன்றியுடன், நீலிமா, சையர் சார்பில்*

**ஆரோவில் ஸ்கூல் ஸ்டீம் முகாம் - சையரின் அறிவிப்பு** (Auroville Schools STEAM Camp - SAIIER announcement)

வெற்றிகரமான கலை மற்றும் கைவினை முகாமில் இருந்து ஈர்க்கப்பட்டு, ஆரோவில் ஆசிரியர்கள் ஒன்று கூடி, நமது குழந்தைகளுக்கு ஊட்டமளிக்கும் மற்றும் கற்றல் அனுபவத்தை உருவாக்கி, ஆரோவில் மாணவர்கள் அனைவருக்கும் '**ஆரோவில் பள்ளிகள் ஸ்டீம் அட்வென்ச்சரை**' ஏற்பாடு செய்கிறோம். கீழே உள்ள பொருத்தமான கூகுள் படிவத்தை பூர்த்தி செய்து பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பதிவு செய்யலாம்:
8-12 வயது குழந்தைகளுக்கு:
https://docs.google.com/forms/d/1Qp0agsBwtFjzbPH9VSfOZ0Xp40ay7_a-0QNiVI6i0q8/edit

13 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு:
https://docs.google.com/forms/d/1nivgpSu6uvaGst5Mr0O-nJOreLxKUNZdIOt1xOqf5Nc/edit

ஏதேனும் கேள்விகளுக்கு saiier@auroville.org.in -க்கு எழுதவும்

*அனுபமா, இராதாகிருஷ்ணா, யாஸ்மின், அண்ணா, பூவிழி, நிலிமா.*

---

**நலவாழ்வு அறிவிப்பு - சித்த மருத்துவர் வருகை**

**கோடைக்கால நோய்களும், தீர்வுகளும் பற்றிய வினாவிடை நிகழ்ச்சி நமது இளைஞர்கள் கல்வி மையத்தில் செவ்வாய்க்கிழமை 14.05.2024 காலை 10.30 முதல் 11.30 வரை நடைபெறும்.**
**வேலூர் சித்தமருத்துவர் வைத்தியர் கே.பி. செல்வம் வழி நடத்துகிறார்.**

நலவாழ்வு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். கட்டணம் இல்லை!

தொடர்பு கொள்ள :- (0413) 2623 773 இளைஞர்கள் கல்வி மையம், ஆரோவில்.
மின்னஞ்சல் – tamil@auroville.org.in

---




**குங் ஃபூ பாண்டா 3** (Kung Fu Panda 3)

**மே 11 அன்று மாலை 7 மணிக்கு, யூனிட்டி பெவிலியனில் குங் ஃபூ பாண்டா பகுதி 3 திரைப்படக்காட்சி.**
புனைவு கதை தொடர்கிறது! **குங் ஃபூ பாண்டா பகுதி** 3 மூலம் அற்புதமான உலகில் மீண்டும் மூழ்க!
இருக்கையின் நுனிவரை உங்களை கூட்டிச்செல்லும் அதிரடி, சிரிப்பு மற்றும் காவியமான குங்ஃபூவின் சண்டைகளுக்கு தயாராகுங்கள்! பார்க்கத் தவறாதீர்கள்!
அனுமதி இலவசம்.

---

**கணிதத்தை நன்கு கற்றல்** (Perfecting Math)

**வகுப்புகள்:** 7ஆம் வகுப்பு, மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள்
**காலம்:** 03/06/2024 - 28/06/2024
(வாரத்தில் 3 நாட்கள் - 1 மணிநேரம்)

**குறிக்கோள்கள்**
1. முந்தைய வகுப்புகளில் இருந்து எண்கணிதம், இயற்கணிதம், வடிவவியல் ஆகியவற்றை மீண்டும் பார்த்தல்.
2. புரிதலில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிதல்.
3. கணக்கீடுகளில் கருத்தியல் புரிதல் மற்றும் துல்லியத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

**தேவையானப் பொருட்கள் (வழங்கப்படும்)**
1. நோட்புக் (சதுரம்)
2. பால் பேனா (நீலம் அல்லது கருப்பு), திருத்தும் பேனா (பச்சை), 2 பென்சில்கள், இரேஸர், ஷார்பனர்
3. ஜியோமெட்ரி பாக்ஸ்
4. 1 ஃபைல் ஃபோல்டர்

**மே 26ஆம் தேதிக்குள் பதிவு செய்யவும்.**
(தொடர்புக்கு: snehal_nc@auroville.org.in)

## மாத்ரிமந்திர் வடக்குப்புற வேலியை ஒட்டியுள்ள சாலையை மூடுதல்
(Closing the road on Matrimandir northern fence line)

அன்பார்ந்த ஆரோவில் சமூகத்தினருக்கு,
மாத்ரிமந்திர் மற்றும் டவுன்ஹால் இடையே, மாத்ரிமந்திர் பணியாளர்கள் கேட்டில் இருந்து, சினிமா பாரடிசோ முன் கடந்து, மாத்ரிமந்திர் அலுவலக கேட் அருகே உள்ள “ஒய் (Y)“ சந்திப்பு வரையிலான செப்பனிடப்படாத சாலை இன்னும் சில நாட்களில் நிரந்தரமாக மூடப்படும். மாத்ரிமந்திர் ஏரி குழுவினர் டவுன் ஹால் முன் அகழாய்வு பணியை விரிவுபடுத்தியதே இதற்குக் காரணம். இந்த சாலை நிரந்தரமான சாலையாக இருக்கக் கூடாது, எனவே இந்த சாலை மூடல் ஆரோவில்லின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குச் செல்ல விரும்புவோருக்கு நகர மையத்தை குறுக்குவழியாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் அடுத்த கட்டத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

நிர்வாகப் பகுதி கட்டிடங்கள்/ டவுன் ஹால் வளாகத்திற்கு இப்போது எப்படி செல்லலாம், தற்காலிக வாகன நிறுத்துமிடம் (தற்போது பாரடிசோவுக்கு முன்னால்) எங்கு மாறலாம் என்பதை இணைக்கப்பட்ட வரைபடம் காட்டுகிறது.
தற்போதைக்கு, கிரவுன் முடிவடையும் வரை, நிர்வாகப் பகுதியை மேற்கு (மாத்ரிமந்திர் நர்சரி பக்கம்) மற்றும் கிழக்கே (சரண்டர்/ கயா சந்திப்புப் பக்கம்) செல்லலாம், மேலும் டவுன் ஹால் வளாகத்தை இரண்டு கேட் முனைகளில் இருந்து நுழையலாம். அதாவது ஏசியுஆர் முடிவு கேட் மற்றும் பவுண்டேஷன் கேட்.

சினிமா பாரடிசோவின் முன் தற்காலிக வாகன நிறுத்தம் குறித்து, தற்போது பலர் பயன்படுத்துகின்றனர், சையர் கட்டிடத்திற்குப் பின்னால் தற்காலிக வாகன நிறுத்தத்திற்கான நிழலிடப்பட்ட இடம் உள்ளது (புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது) இதை பவுண்டேஷன் பக்கத்திலிருந்து வளாகத்திற்குள் நுழைபவர்கள் பயன்படுத்தலாம்.

அன்பான வாழ்த்துக்கள்,
டாக்டர் G. சீதாராமன் (எம்எஸ்), கோவிந்த், ஜெயா, பொன்னுசாமி, சிந்துஜா, டோபி

*குறிப்பு - இதன் வரைபடம், புகைப்படங்கள் ஆகியவற்றுக்கு நியூஸ் அண்ட் நோட்ஸ் ஆங்கிலச் செய்தியைப் பார்க்கவும்.*



**சையருக்கு பின்னால் வாகனம் நிறுத்துமிடம்**

---

## ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் - கஷ்டங்கள்

**பூரணத்தை நோக்கிய பாதையில்முன்னேற விரும்பும் ஒருவன் வழியிலுள்ள கஷ்டங்களை எண்ணிப் புலம்பக் கூடாது, ஏனெனில் ஒவ்வொரு கஷ்டமும் ஒரு முன்னேற்றத்திற்கான வாய்ப்பாகும். புலம்புவது பலவீனத்தின், நேர்மையின்மையின் அடையாளம்.**

**வெற்றிக்கு முந்திய காலங்கள் அடிக்கடி எல்லாவற்றிலும் அதிக க் கஷ்டமானவையாக இருக்கும்.**

**நீ முனங்கும் அளவிற்கு உன்னுடைய வேதனை அதிகரிக்கும்.**

## மார்டின் காலமானார் (Martin Passed Away)



மார்ட்டின் ஒரு அற்புதமான மனிதர்: தாராள மனப்பான்மை கொண்டவர், கடின உழைப்பாளி, அவர் உறுதியளித்த மக்களுக்கும் திட்டங்களுக்கும் அர்ப்பணிப்புடன் இருந்தார். அவர் முதன்முதலாக சுவிட்சர்லாந்தில் இருந்து (நாடியா, லூகா, டேவிட்) தனது குடும்பத்துடன் 1997-இல் ஆரோவில்லுக்கு வந்தார்

கடந்த 12 ஆண்டுகளாக அவர் பொட்டானிக்கல் கார்டன் குழுவின் ஒருங்கிணைந்த அங்கமாக இருந்து வந்தார், அவர் உருவாக்கிய புளூமேரியா, பிற தோட்டங்களை கவனித்து வந்தார், அத்துடன் தோட்டங்களுக்கு வந்த பல தன்னார்வலர்களை வரவேற்று வழிகாட்டினார். தோட்டத்தின் மையப் பகுதி வழியாக, புளூமேரியாவிலிருந்து பிரதான குளம் வரை மற்றும் மூங்கில் பகுதி வழியாகச் செல்லும்போது, அவரது கர்மயோகத்தின் வெளிப்படையான அழகை நாம் பாராட்டலாம்.

ஆனால் பொட்டானிக்கல் கார்டனில் பணியாற்றிய இந்த ஆண்டுகளை விட ஆரோவில்லில் அவரது வாழ்க்கை மிகவும் பரந்ததாகவும் வளமானதாகவும் இருந்தது. அவர் தமது மனைவி சிவகலாவுடன் சேர்ந்து, உள்ளூர் இளைஞர்களுக்கு அவர்களது கல்லூரி படிப்பு வரை ஆதரவளித்து வழிகாட்டும் பொறுப்பை ஏற்று, அவர்கள் வளர்வதற்கு பாதுகாப்பான, பத்திரமான வீட்டை வழங்கி, பலரது வாழ்க்கைக்கு பங்களித்துள்ளார். சிலர் ஐந்து வயதில் வந்தனர். மற்றவர்கள் கொஞ்சம் பெரியவர்களாக இருக்கும்போது வந்தார்கள், ஆனால் இன்றைக்கு பத்துக்கும் மேற்பட்ட இளம்பெண்கள் ஆகியுள்ளனர், அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும் கல்வியிலும் - மார்ட்டினின் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ளனர். இது குறித்து அவர்கள் கூறியது:

"அவர் எங்களைத் தமது கைகளால் தூக்கிக் கொண்டு தன் சொந்தக் குழந்தைகளைப் போல வளர்த்தார். நாங்கள் ஒருபோதும் குடும்பத்திலிருந்து அந்நியப்பட்டதாக உணர்ந்ததில்லை."

"அவர் ஒரு தந்தை மட்டுமல்ல, ஒரு நல்ல நண்பர், ஒரு வழிகாட்டி. அத்தகைய அற்புதமான மனிதரை நாமும் இந்த பிரபஞ்சமும் இழந்துவிட்டது. நாங்கள் உங்களை நேசிக்கிறோம் அப்பா".

"எங்களது வாழ்க்கையில் தந்தையின் பங்கை அவர் மிகச் சரியாக நிறைவேற்றி, ஒரு அர்த்தமுள்ள எதிர்காலத்தை எங்களுக்கு வழங்கினார். ஒவ்வொரு முறையும் சிரித்து அணைத்துக்கொள்ளும் ஆன்மா, எங்களுக்கு எந்தவொரு பிரச்சனை வந்தாலும் எங்களைப் பாதுகாப்பாக உணரச் செய்தவர்".

"அவர் இரத்த உறவு இல்லாமல் ஒரு குடும்பப் பந்தத்தை உருவாக்கினர், ஆனால் இதயத்தாலும் ஆன்மாவாலும் முழுமையாக இணைக்கப்பட்ட ஒரு குடும்பம்"

"வாழ்க்கையில் அனைத்தையும் அவர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். மரியாதை, அன்பு, அக்கறை, பொறுப்புடன் இருப்பது எப்படி என்பதை அவர் எங்களுக்கு கற்றுக் கொடுத்தார். அவர் இல்லாமல் நாங்கள் ஒன்றுமில்லை. எங்கள் வெற்றிக்கான அனைத்துப் படிகளும் அவர்களின் தியாகத்தாலும் அன்பினாலும் நிரம்பியுள்ளன.

"மார்ட்டின் பொன்னான இதயம் கொண்டவர். நீங்கள் உலகத்தை சிறந்த இடமாக மாற்றியதற்கு, நன்றி மார்ட்டின்".

அவர் நியூகிரியேஷன் பள்ளியில் பல ஆண்டுகளாக சமையல் கூடத்தை கவனித்து வந்தார், எப்போதும் தனது மகிழ்ச்சியான புன்னகையுடனும் மகிழ்ச்சியான முகத்துடனும், எல்லா குழந்தைகளுக்கும் நன்றாக உணவு அளிக்கப்படுவதை உறுதிசெய்தார். நியூகிரியேஷன் உடனான அவரது தொடர்பு, அவரது முதல் குழந்தைகள் பாதுகாப்பு மையம் ஃபோர்கமர்ஸ் நர்சரி ஆகும், அங்கிருந்து எட் சென்ற பிறகு அவர் பொறுப்பேற்றார், நியூகிரியேஷன் பள்ளி சமையல் கூடத்திற்கு பிறகு அவர் பல ஆண்டுகள் மாத்ரிமந்திரில் உள்ள நர்சரியில் பணியாற்றினார், அங்கு அவர் புளூமேரியா மீதான ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். மேலும் தாவரங்கள் மீதான தமது அன்பால் அனைவரையும் உற்சாகப்படுத்தினார்.

அவர் தமிழ்நாட்டின் நிலக்காட்சியின் மீது மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தார், குறிப்பாக செஞ்சியின் பாறை நிலக்காட்சிகள் அவரை மிகவும் கவர்ந்தன. அங்கு அவர் ஒரு சரணாலயக் காட்டை உருவாக்கினார் - வார இறுதி நாட்களில் அவர் அமைதியான சிந்தனையில் நேரத்தைக் கழிப்பதற்கும், அப்பகுதியை மேம்படுத்தவும் அங்கு அடிக்கடி செல்வார்.

ஆரோவில் என்று அழைக்கப்படும் இந்த அற்புதமான இடத்தில் ஒருவர் எப்படி வாழ முடியும் என்பதற்கு அவர் ஒரு அற்புதமான உதாரணம். வாழ்க்கையின் முழுப் பொறுப்பையும் ஏற்று, அதை முழுமையாக வாழ்ந்து, நாம் வாழும் இடத்தை அனைவருக்கும் சிறந்த இடமாக மாற்றியவர். அவர் எப்போதும் நம் நினைவில் இருப்பார்.

அவரது உடல் 02.05.2024, வியாழன் அன்று காலை 9 மணிக்கு அட்வென்ச்சர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
சிவகலா மற்றும் அவருடைய பெரிய குடும்பத்திற்கு நமது அன்பும் ஆதரவும் உரித்தாகுக. *ஓம்~*

---

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் - வேலை**

**இறைவனுக்காக வேலை செய், உனது ஜீவனை சொல்லொண்ணாத ஒரு மகிழ்ச்சி நிரப்புவதை உணர்வாய்.**

**இறைவனுக்காகச் செய்யப்படும் வேலை: முன்னேறுவதற்கு மிக நிச்சயமான சாதனம்.**